DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 158/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | பழனியம்மாள் | Age | : | 58 |
| F/N | : | சுப்புராஜ் | Occupation | : | |
| Village | : | | | | |
| District | : | தேனி | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 10-th day of October 2022.

**10.10.2022.**

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது சார்பு நீதிபதியாக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தேனி மாவட்டத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். **(சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்).** இதற்கு முன்பு 2012–2013 ம் ஆண்டு நான் இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண். 1 ல் நீதிபதியாக பணிபுரிந்து நீதித்துறை நடுவர் 2 ல் நீதிபதியாக முழு கூடுதல் பொறுப்பில் இருந்தேன். அப்போது 1–ம் எதிரி உதவியாளராகவும், 2–ம் எதிரி தட்டச்சராகவும் நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் பணிபுரிந்து வந்தார்கள். இராமநாதபுர மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி அவர்களிடம் மனுதாரர் சண்முகவள்ளி என்பவர் பிறப்பு, இறப்பு சான்று மனுவில் நீதித்துறை நடுவர் எண். 2 ல் பெற்ற உத்தரவின் பேரில் இராமநாதபுரம் வட்டாட்சியர் அவர்கள் வாரிசு சான்றிதழ் வழங்கவில்லை என்று கொடுத்த புகாரின் பேரில் இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் மூலமாக இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள். 05.12.2012 ம் தேதி இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்ற கடித எண். 1564/2012 ன் மூலமாக விளக்கம் கேட்டார்கள்.

2. நான் இராமநாதபுரம் வட்டாட்சியர் அவர்களை வாய்மொழியாக அழைத்து நீதித்துறை நடுவர் எண். 2 ன் Cr.M.P. No. 3894/2012 சம்பந்தமாக விளக்கம் கேட்டபோது தாசில்தார் அவர்கள் நீதித்துறை நடுவர் எண். 2 Cr.M.P. No. 3894/2012, Cr.M.P. No. 2889/2012 மற்றும் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற Cr.M.P. No. 4095/2012 ஆகிய மூன்று பிறப்பு, இறப்பு உத்தரவுகளை இணைத்து நீதித்துறை நடுவர் அவர்களின் கையெழுத்து சம்பந்தமாக உண்மை தன்மையை தெரிவிக்குமாறு ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அந்த வேண்டுகோள் கடிதம் இராமநாதபுரம் வட்டாட்சியர் அலுவலக ந.க.அ. 9/17299/2012 நாள். 10.12.2012 **அந்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கடிதத்தை பெற்ற நான் கோப்புகளை பரிசீலனை செய்து நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்ற Cr.M.P No. 2889/2012 உத்தரவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற Cr.M.P. No. 4095/2012, நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்ற

Cr.M.P No 3894/2012 ஆகிய பிறப்பு இறப்பு உத்தரவுகளில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று குறிப்பிட்டு இராமநாதபுரம் வட்டாட்சியர் அவர்களுக்கு 20.12.2012–ம் தேதி நீதித்துறை நடுவர் எண். 1 கடித எண். 4652/2012 மூலம் அறிக்கை அனுப்பினேன்.

**3. (அந்த Cr.M.P. No. 2889/2012 பிறப்பு இறப்பு உத்தரவு நகல் Form 3 யுடன் இணைந்தது அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய கையெழுத்து இல்லை என்று மறுக்கப்பட்ட நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்ற Cr.M.P. No. 3894/2012 பிறப்பு இறப்பு உத்தரவு நகல் Form 3 யுடன் இணைந்தது அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய கையெழுத்து இல்லை என்று மறுக்கப்பட்ட நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற Cr.M.P. No. 4095/2012 பிறப்பு இறப்பு உத்தரவு நகல் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இராமநாதபுரம் வட்டாட்சியர் அவர்களுக்கு 20.12.2012 அன்று அனுப்பிய கடித எண். 4652/2012 அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அ.சா. ஆ. 1 முதல் 5 ஆவணங்கள் நகல்கள் என்ற காரணத்தினால் எதிரி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** அதன்பிறகு நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்ற Cr.M.P. No. 3894/2012 சம்பந்தமான மனு மற்றும் நீதிமன்ற பதிவேடுகளை பார்வையிட்டு மேற்படி உத்தரவில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றும் மேற்படி Cr.M.P. மனு மற்றும் சாட்சிகளின் விசாரணையை என்னுடைய கவனத்திற்கு கொண்டு வராமல் போலி கையெழுத்திட்டு அனுப்பப்பட்டதாக தெரிய வருகிறது என்றும் இராமநாதபுரம் வட்டாட்சியர் அவர்களால் என்னிடம் கொடுக்கப்பட்ட நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்ற 52 உத்தரவுகளில் போலி கையெழுத்தும் அசல் நீதிமன்ற முத்திரையிடப்பட்டது என்றும் இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்டதாக கூறி தாசில்தாரால் என்னிடம் கொடுக்கப்பட்ட 10 பிறப்பு, இறப்பு உத்தரவுகளில் நீதித்துறை நடுவர் அவர்களின் போலி கையெழுத்தும், போலி நீதிமன்ற முத்திரையும் இட்டு தாசில்தார் அவர்களுக்கு அனுப்பப்பட்டதாக தெரிய வருகிறது என்று கூறி 11.12.2012–ம் தேதி நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற கடித எண். 4400/2012 என்ற எண்ணில் இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தேன்.

**5.** இராமநாதபுர மாவட்ட அமர்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதிபதி இருவரும் நீதித்துறை நடுவர் எண். 1 மற்றும் 2 நீதிமன்றங்களின் திடீர் ஆய்வு செய்து இராமநாதபுரம் மாவட்ட முதன்மை நீதிபதி அவர்கள் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களிடம் பிறப்பு, இறப்பு உத்தரவு மீது நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியதன் பேரில் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற கடித எண். 1600/2012 என்ற எண்ணில் 12.12.2012 ம் தேதி விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். அதன்பேரில் நான் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் கூடுதல் பொறுப்பில் இருந்தபோது 332 போலி பிறப்பு, இறப்பு உத்தரவுகள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிய வந்தது.

**6.** 24.07.2012–ம் தேதி நான் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் கூடுதல் பொறுப்பு வைத்த காலத்தில் இராமநாதபுரம் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட Cr.M.P. NO. 1786/2012 உத்தரவில் முன்னிலை கே. பழனியம்மாள் என்றும் உத்தரவு எனக்கு முன்பு நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் நீதித்துறை நடுவராக

பதவியில் இருந்த பி. ரேவதி என்று கையெழுத்திட்டு போலியாக அனுப்பப்பட்டது தெரிய வந்ததாகவும், நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிறப்பு, இறப்பு மனுக்கள் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவரப்படாமல் கோப்பிற்கு எடுத்து சாட்சிகள் வாக்குமூலங்களை தட்டச்சு செய்யப்பட்டு டாக்கெட்டில் உத்தரவு அடிக்காமல் பிறப்பு, இறப்பு மனுக்கள் நிலுவையில் உள்ளது போல் காட்டிவிட்டு அதன் பெயரில் பிறப்பு, இறப்பு உத்தரவுகள் போலி கையெழுத்து மற்றும் அசல் நீதிமன்ற முத்திரைகள் வைக்கப்பட்டு தனியாக டெஸ்பேட்ஜ் ரிஜிஸ்டர் பராமரிக்கப்பட்டு போலி உத்தரவுகள் அனுப்பப்பட்டதாக தெரிய வருகிறது என்றும் Cr.M.P எண்கள் 4083/2012, 4084/2012, 4086/2012, 4088/2012, 4089/2012, 4093/2012, 4095/2012 ஆகிய உத்தரவுகளில் கொடுக்கப்பட்டுள்ள Cr.M.P எண் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற பிரிவு 317 குவிமுச பிரிவின் படியான மனுவிற்கு கொடுக்கப்பட்ட Cr.M.P எண்கள் என்று தெரிய வந்தது என்றும் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற Cr.M.P No 1404/2012 மனுவில் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு 04.01.2013–ம் தேதி வாய்தா ஏற்பட்டு மேற்படி மனுவானது நிலுவையில் உள்ள நிலையில் 10.10.2012–ம் தேதி கடித எண். 3618/2012 போலி கையெழுத்து மற்றும் போலி முத்திரையிட்டு அனுப்பப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளதாகவும் கூறி 11.01.2013–ம் தேதி நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற கடித எண். 126/2013 என்ற எண்ணில் இராமநாதபுரம் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தேன்.

**7.** பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் சம்பந்தமாக இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண். 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் முறைகேடுகள் நடந்ததாக தெரிய வந்ததால் இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் 02.01.2012–ம் தேதி பணியாற்றிய நடுவரின் உதவியாளர் ரவிச்சந்திரன், தட்டச்சர் மனோகரன் பதிவு எழுத்தர் சுந்தர பெருமாள், கிருஷ்ணவேணி மற்றும் ஹரிதாஜ், தலைமை எழுத்தர் மங்களம், செல்வகணேஷ், ராஜ்குமார் ஆகியோர்களுக்கு குறிப்பாணை வழங்கப்பட்டு விளக்கம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்ற நடுவரின் உதவியாளர் ரவிச்சந்திரன் மற்றும் தட்டச்சர் மனோகரன் தற்காலிக பணி நீக்கம் செய்யபட்டனர். நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற ஆவணங்களை பரிசீலனை செய்த நான் பிறப்பு, இறப்பு மனு சம்பந்தமாக உத்தரவுகளில் பிரிவு 317 குவிமுச வின் படியான மனு கொடுக்கப்பட்ட Cr.M.P எண்களை குறிப்பிட்டு போலி கையெழுத்து மற்றும் போலி நீதிமன்ற முத்திரையிட்டு அனுப்பியது சம்பந்தமாக நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண். 1 ல் Despatch clerk ஆக பணிபுரிந்த திரு. சிவானந்தம் அவர்களுக்கு குறிப்பாணை அனுப்பினேன்.

**8.** இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 12.12.2012–ம் தேதி மற்றும் 21.12.2012–ம் தேதியிட்ட அறிக்கையின் பேரில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பிறப்பு, இறப்பு சம்பந்தமாக முறைகேடுகள் குறித்து அலுவலகர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்குமாறு Roc No. 1625–எ/2012–சி1/எம்.பி உத்தரவின் பேரில் நான் இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். (**அந்த புகார் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). ஆய்வாளர் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது என்னிடம் இருந்து ஏதேனும் ஆவணம் பெற்றுக்கொண்டாரா என்றால் பெற்றுக்கொள்ளவில்லை. இந்த பிரச்சனை சம்பந்தமாக ஏற்கனவே, ஆஜர் எதிரி மற்றும் 5 நபர்கள் மீது துறைவாரியான நடவடிக்கை எடுக்கப்பட்டு அதில் நான் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். பிறப்பு, இறப்பு மனுக்களுக்கு Cr.M.P எண் மட்டும் தான் கொடுக்கப்படும் அதற்கென்று தனியாக பதிவேடு உள்ளது. அந்த Cr.M.P உத்தரவுகளுக்கு தனியாக Disposal Register மற்றும் Destruction Register பராமரிக்கப்படுவதில்லை என்றால் சரிதான். இந்த Cr.M.P மீது போடப்படும் உத்தரவுகளுக்கு தனியாக Norms கிடையாது என்றால் சரிதான். Cr.M.P. மனுக்கள் தினசரி இரண்டு நீதிமன்றங்களிலும் சுமார் 30 மனுக்கள் வரும் என்றால் சரிதான். அதே போன்று 2 நீதிமன்றங்களிலும் சுமார் 30 Cr.M.P மனுக்களில் சாட்சி விசாரணை நடைபெறும் என்றால் சரிதான்.

**2.** வேலை பழு அதிகமாக இருந்ததால் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த Computer form –ல் மனுதாரர் பெயர் மற்றும் மற்ற விவரத்தை தட்டச்சர் தயார் செய்து அதில் நான் கையொப்பம் இடுவேன் என்றால் சரியல்ல. Cr.M.P எண் 2889/2012 ன் உத்தரவு ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்ட Computer Form– ல் மனுதாரர் பெயர், வழக்கறிஞர் பெயர், மனு தேதி மற்றும் தீர்ப்பு தேதி ஆகியவை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. Computer Form–ல் மேற்சொன்ன விவரத்தை தட்டச்சு செய்வது வழக்கம் என்றாலும் தற்போது மாற்றி கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் கொடுத்த புகார் மனுவில் எதிரிகள் யாரென்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற அரசு ஊழியர்கள் மற்றும் முறைகேடில் ஈடுபட்ட பிற நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்படி பிற நபர்கள் என்று குறிப்பிடப்பட்டது யாரை குறிப்பிட்டு நான் கூறினேன் என்றால் யாரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை.

**3.** முறைகேட்டில் ஈடுபட்ட நபர்களை கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தேன். நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற பிறப்பு, இறப்பு உத்தரவுகளில் முறைகேடு நடந்ததால் அந்த நீதிமன்றத்தின் ஊழியரிடம் Memo கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற ஊழியரின் முறைகேடு குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை. தாசில்தார் என்னிடம் எவ்வாறு 52 Cr.M.P உத்தரவுகள் கொடுத்தார் என்றால் வாய்மொழியாக பெற்றேன். ஏனென்றால் உடனடியாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு பணிந்து உடனே பிறப்பு, இறப்பு முறைகேடுகள் சம்பந்தமாக புகார் கொடுக்க வேண்டும் என்பதால் என்னால் இராமநாதபுரம் வட்டாட்சியர் அவர்களிடம் விசாரித்து எழுத்து மூலமாக பெறமுடியவில்லை.

**4.** நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற 10 உத்தரவுகளில் போலியாக கையெழுத்து மற்றும் போலியாக முத்திரையிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் இருந்து மாதிரி கையொப்பம் பெற்று ஆய்வாளர் கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற்றாரா என்றால் இல்லை. நீதித்துறை நடுவர் எண். 1 மற்றும் 2 நீதிமன்றங்களின் அசல் முத்திரையை போலி முத்திரையுடன் ஒப்பீடு செய்வதற்காக ஆய்வாளர் பெற்றாரா என்றால் பெறவில்லை. இந்த சம்பவம் நீதிபரிபாலனை செய்யும் போது அதை பாதிக்கும் வகையில் நடைபெற்ற சம்பவம் என்றால் சரியல்ல. எனக்கு இந்த முறைகேடை பற்றி தெரிய வந்தவுடன் யாரேனும் முதல்நிலை விசாரணை செய்தேனா என்றால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற

உத்தரவுப்படி புகார் அளித்தேன். முதல்நிலை விசாரணை செய்வதற்கு எனக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் அதிகாரம் அளிக்கவில்லை.

**5.** சம்பவம் எனக்கு தெரிய வந்து நான்கு மாதம் கழித்து தான் நான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். மேல்அதிகாரியிடமிருந்து எனக்கு எவ்வித உத்தரவும் வராததால் உத்தரவுக்குப்பின் புகார் அளித்தேன். இரண்டு நீதிமன்றங்களிலும் நான் திறந்த நீதிமன்றத்தில் தான் சாட்சியங்கள் பதிவு செய்வேன் என்றால் சரிதான். நான் புகார் கொடுப்பதற்கு முன்பே இவ்வழக்கில் இறந்த இரண்டாவது எதிரியான மனோகரன் தான் தான் இந்த குற்றத்திற்கு காரணம் என்று மாண்புமிகு உயர்நீதிமன்றத்திற்கு 26.10.2012–ம் தேதி கடிதம் வாயிலாக தெரிவித்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த கடிதம் மனோகரனுக்கு எதிராக தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரின் முன் நடந்த துறைவாரியான நடவடிக்கையில் சான்றாவணம் 32 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

**6.** 05.09.2012 அன்று நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரால் வருடாந்திர ஆய்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆய்வின் போது Inspection clerk ஆக குணசேகரன் மற்றும் ராமச்சந்திரன் வந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. அந்த ஆய்வறிக்கையில் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களில் நடந்த முறைகேடுகளை குறித்து குறிப்பிடப்படவில்லை மற்றும் அந்த ஆய்வறிக்கையில் பிறப்பு, இறப்பு சம்பந்தமான மனுக்களில் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் நீதிபதியின் கையெழுத்து இல்லை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அப்போது பணியில் இருந்த ஊழியர்கள் பிறப்பு, இறப்பு சான்றிதழ் சம்பந்தமாக தனியாக ஆவணங்கள் பராமரித்து நீதித்துறை நடுவர் அவர்களுக்கோ, தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கோ கவனத்திற்கு கொண்டு வராததால் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

**7.** அந்த ஆய்வறிக்கையில் பிறப்பு, இறப்பு சம்பந்தமான மனுக்களில் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் நீதிபதியின் கையெழுத்து இல்லை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பிறப்பு, இறப்பு சான்றிதழ் சம்பந்தமான தனியாக Despatch Register யை எதிரி மனோகரன் தான் பராமரித்து வந்தார் என்பது துறைவாரியான விசாரணையில் அவர் மீது 6–வது குற்றச்சாட்டாக வனையப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தலைமை நீதித்துறை நடுவரால் திடீர் ஆய்வு செய்ய நீதிமன்ற ஊழியர் குணசேகரன் தலைமையில் நீதித்துறை நடுவர் எண். 1 மற்றும் 2 நீதிமன்றங்களில் அனுப்பப்பட்ட நிலையில் மேற்படி நபர்கள் ஆய்வு செய்து முதல்நிலை அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிக்கு எதிராக தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடந்த துறைவாரியான நடவடிக்கையில் அவர் பிழையாளியில்லை என்று உத்தரவு போடப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

**8.** அ.சா.ஆ. 4 ற்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 2 ல் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.3 சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு என்றால் சரிதான். அந்த மனுவின் அசலை பார்த்தால் தான் அதன் உண்மை தன்மை குறித்து சொல்ல முடியும் என்றால் சரிதான். அ.சா.ஆ. 3 ல் உள்ள நீதிமன்ற முத்திரை நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தின் முத்திரை தான் என்று சொன்னால் இது சம்பந்தமாக நிபுணர்களுக்கு அனுப்பி தான் சொல்ல முடியும். புகாரில்

அ.சா.ஆ.3ல் என்னுடைய கையொப்பம் மட்டும் தான் போலியாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் மனுவில் Cr.M.P. No 3894/2012–ல் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றும் மேற்படி மனுவானது என்னுடைய கவனத்திற்கு கொண்டு வரப்படாமல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு சாட்சிகளை விசாரணை செய்து போலி கையெழுத்திட்டு அனுப்பட்டுள்ளதாக புகாரில் குறிப்பிட்டுள்ளேன்.

**9.** 332 பிறப்பு, இறப்பு உத்தரவுகளை நான் நேரடியாக ஆய்வு செய்தேனா என்றால் ஆய்வு செய்தேன். 332 உத்தரவுகளின் மனுதாரர்கள் பெயர்களை குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்த எதிரியான மனோகரன் தான் குற்றம் இளைத்தவர் என்று தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் முன் நடந்த துறைவாரியான நடவடிக்கையில் உத்தரவிடப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நடுவரின் உதவியாளர் என்பவர் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி விசாரணையின் போது சான்றாவணங்களை குறியீடு செய்யும் பணியை செய்வார் என்றால் சரியல்ல. இந்த குற்றத்தை மனோகரன் தான் செய்தார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். II**
**இராமநாதபுரம்**